செ.வெ.எண்: 30 /2021 நாள்: 17.06.2021

## திருப்பூர் மாவட்டம்.

## திருப்பூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட நியாயவிலைக்கடைகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திடீர் ஆய்வு !!!

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட கருவம்பாளையம் மற்றும் ஆலங்காடு கூட்டுறவு மொத்த விற்பனை நியாய விலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.06.2021) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட கருவம்பாளையம் மற்றும் ஆலங்காடு கூட்டுறவு மொத்த விற்பனை நியாய விலைக்கடைகளில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணையாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கவதையும் மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தையும் ஆய்வு செய்தார். பொது விநியோக திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சர்க்கரை, அரிசி, கோதுமை, பாமாயில், பருப்பு வகைகள், மின்னனு எடை இயந்திரத்தின் செயல்பாடு மற்றும் இருப்பு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, குமரன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை மையத்தில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் உணவு முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டு அறிந்தார். மேலும், கொரோனா சிகிச்சை மையத்தின் வளாகத்தினை கிருமி நாசினி கொண்டு சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திட வேண்டுமென மருத்துவர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கணேசன் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**

D:\user docs\Desktop\JUNE -2021\17.06.2021\PR.NO.30.docx